பணியின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களை, 1969-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1-ம் தேதி அன்று சந்தித்து தூத்துக்குடி மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரிடமும், உறுப்பினர்களிடமும் மேற்சொன்ன நிலை தெரிவிக்கப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் வினா எண் 553-க்கும் விடை அளித்துவிடலாம்.

THIRU K. VINAYAKAM : These are different questions with different answers. You cannot embarrass the Minister by suggesting the clubbing of the questions. She herself refuses to have them clubbed.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுவும் மீன்பிடி துறைமுகம் பற்றியதுதான். அமைச்சர் அவர்கள் பதில் அளித்துவிடுவார்கள்.

*** 553 வினா—திரு. கரு. சிமைச்சாமி :** மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னை மீன்பிடி துறைமுக திட்டத்துக்கு நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது ?

(இ) வேலைத் திட்டத்தின் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) சென்னையில் மீன்பிடி துறைமுகம் ஒன்றைக் கட்டுவதற்கு இந்திய அரசு ரூ. 388·50 லட்சம் தொகைக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

(இ) துறைமுகம் கட்டுதல் :—

1. தொடக்கப்பணி—மண்வள ஆய்வு—மாதிரி சோதனை நேரிட அலுவலகம்.
2. நிலம் கையகப்படுத்துதல்.
3. சிறப்பு இயந்திரங்கள், கருவிகளை வாங்குதல்.
4. 10-20 மட்டக்கோட்டில் அலைத் தடுப்புச் சுவர் கட்டுதல்.
5. 20-30 மட்டக்கோட்டில் அலைத் தடுப்புச் சுவர் கட்டுதல்.
6. இழு படகுக்காக சரக்குத் துறைகளையும் 1,100 அடி நீளம் கொண்ட மீட்புச் சுவர்களையும் கட்டுதல்.
7. இயந்திரப் படகுகளுக்காக ஆழமில்லாத சரக்குத் துறையைக் கட்டுதல்.
8. இழு படகுகள் வந்து தங்குவதற்கான வசதிகளைச் செய்தல்.
9. வடிநிலத்தில் 20 அடிக்கு தூறு எடுத்தல்.
10. நீர்வழிப் போக்குவரத்திற்கான வசதிகளைச் செய்தல்.

கரையோர வசதிகளான சாலைகள், ரயில் பாதைகள், மின்சக்தி, நீர் வழங்குதல் ஆகிய வசதிகளைச் செய்தல்.

இழு படகுகளுக்கான சரக்குப் பாதை பழுது பார்க்கும் வசதிகள் ஆகியவைகளைச் செய்தல்.

கரையோர கட்டிடங்களான, ஏலம் விடும் கூடம், சிப்பங்கட்டும் கூடம், அலுவலகம், சிற்றுண்டிச்சாலை, பண்டகசாலை, ஓய்வுக் கொட்டகைகள், கழிப்பிடங்கள், வேலிகள், வாயில்கள் ஆகியவைகளை அமைத்தல்.

பனிக்கட்டிப் பிரிவு குளிர்ப்பதனப் பிரிவு உறையவைக்கும் பிரிவு, கொள்கலன்களில் அடைக்கும் பிரிவு, மீன் மாவுப் பிரிவு போன்ற சேமிப்புப் பிரிவுகளையும் பதப்படுத்தும் பிரிவுகளையும் ஏற்படுத்தல்.

1970 மார்ச் 26]

திரு. டி. மார்டின்: தூத்துக்குடியில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்காக எடுக்கப்பட்ட இடத்தை தொன்றுதொட்டு பலகாலமாக மீனவர்கள் தங்கள் படகுகளை நிறுத்துவதற்குப் பயன்படுத்திவந்த இடமாகும். அந்த இடத்தை எடுத்துக்கொள்வது அவர்களுடைய பிழைப்பை பாதிப்பதாக இருக்கும். ஆகவே தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்திற்குச் சற்றுத் தெற்கே தள்ளியோ அல்லது தூத்துக்குடியின் வடபாகத்திலோ துறைமுகம் அமைக்கவேண்டுமென்று மனுக்கள் அனுப்பியிருந்தார்களே, அப்படி மாற்றுவதற்கான முறை பரிசீலிக்கப்பட்டதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இப்போது தேர்ந்தெடுத்த இடத்தில் இருந்து துறைமுகத்தை மாற்ற எந்தவிதமான ஏற்பாடும் செய்யப்படவில்லை.

சுற்றுலா மாளிகைக்குத் தெற்கில் உள்ள ஐந்து எக்கர் நிலத்தை மீனவர்களது படகுகள் வைக்க ஒதுக்குவதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மீனவர் சங்கமும் இதை ஒத்துக்கொண்டிருக்கிறது. இந்தப் புதிய துறைமுகம் கட்டும்போது தூர் வாரப்படுகிற மண்ணைக்கொண்டு அந்த நிலத்தை மேம்படுத்தி அளிக்க திட்டமிடப்பட்டிருக்கிறது.

திரு. மு. வேதாசலம்: சென்ற ஆண்டிலேயே கட்ட ஏற்பாடு செய்யப்பட்ட சென்னை ராயபுரம் மீன்பிடித் துறைமுகம் கட்டுவதில் தாமதம் ஏற்படக் காரணம் என்ன? அது எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: 1971—72-ஆம் ஆண்டிற்குள் இது கட்டி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கரு. சிமைச்சாமி: சென்னை மீன்பிடித் துறைமுக வேலைகளைப் பற்றிச் சொன்னார்கள். அது எப்போது ஆரம்பிக்கப்படும்? தேசீய அபிவிருத்திக் கவுன்சில் நான்காவது திட்டத்தில் சேலம் இரும்பாலையைச் சேர்க்கவில்லை என்பதாக நிதி அமைச்சர் அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்களே, அதனால் இந்தத் திட்டம் பாதிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இதை மத்திய அரசாங்கம் ஏற்கனவே ஒத்துக்கொண்டிருக்கிறது. அதற்கான நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டிருக்கிறது. 1970-71 ஆம் ஆண்டிற்குள் எல்லா வேலைகளும் முடிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. க. சிவசாமி: தற்போது தூத்துக்குடியில் கட்டப்பட்டுக்கொண்டிருக்கிற மீன்பிடி துறைமுகத்தில் இதுவரை நிறுத்தப்பட்டு வந்த கட்டுமரங்களுக்கு வேறு இடம் இல்லை, சுற்றுலா மாளிகைக்குத் தென்பக்கம் ஐந்து எக்கரா நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதை ஆழப்படுத்தி, இப்போதே மேடு பண்ணிக்கொடுத்தால்தான் படகுகளை ஒதுக்க முடியும். அதுவரை தொல்லை ஏற்படுவதால் அந்த வேலையை அரசு இந்த ஆண்டே ஆரம்பித்து முடித்துக் கொடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: சுற்றுலா மாளிகைக்குப் பக்கத்தில் இடம் ஒதுக்கப்படுவது படகு உரிமையாளர்களுக்கு என்று சொல்லவில்லை. அங்கே இரண்டு சங்கங்கள் இருக்கின்றன. ஒன்று படகு உரிமையாளர் சங்கம், மற்றொன்று மீனவர் சங்கம். மீனவர் சங்கத்தின் கோரிக்கைகளின்படிதான் அவர்களுக்கு இந்த இடம் ஒதுக்கப்படுகிறது.

படகு உரிமையாளர் உபயோகப்படுத்தி வந்த நிலத்தில் இந்தத் துறைமுகத்திற்கு 1·5 எக்கர் நிலமே தேவைப்படுகிறது. அது பற்றி கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களுடனும் சேர்ந்து விவாதித்த பிறகு 670 அடி எடுத்துக்கொள்ளலாம் என்றும், 650 அடியை அவர்களே எடுத்துக்கொள்ளலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது. அதற்கு படகு உரிமையாளர் சங்கமும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.